# தமிழில் நவீன இலக்கியத் திறனாய்வு வளர்ச்சிக்கு ஈழத்தறிஞர்களின் பங்களிப்பு: வரலாற்றுத் திறனாய்வு நோக்கு

திரு. க. அருந்தாகரன்,
தமிழ்த்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

**முதன்மைச் சொற்கள்** :இலக்கியம், திறனாய்வு, மீள்வாசிப்பு,மாக்சியம், மொழியியல்

**ஆய்வு அறிமுகம்**

கலை இலக்கியம் பற்றிய புரிந்து கொள்ளலில் இலக்கியத் திறனாய்வின் பங்கு மிக முக்கியமானது. நீண்ட இலக்கியப் பாரம்பரியத்தினைக் கொண்ட மொழிகள் தமக்கெனத் தனித்துவமான இலக்கிய ஆக்கம், இலக்கிய இரசனை மற்றும் இலக்கிய மதிப்பீட்டு முறைகளையும் - கோட்பாடுகளையும் - சிந்தனைகளையும் வளர்த்து வந்துள்ளமையினை அவதானிக்கலாம். அனைத்திந்திய மட்டத்தில் வைத்து நோக்கும் போது வடமொழி அழகியற் கொள்கைகள் மற்றும் தமிழிலக்கியக் கொள்கைகள் குறிப்பிடத்தக்கன.

திறனாய்வு குறித்த பிரக்ஞைபூர்வமான சிந்தனை, நவீன இலக்கியப் பரிச்சயத்துடனேயே ஏற்படுகின்றது. உண்மையில் மேற்குலகத் தொடர்பினால் தமிழில் வந்து பயிலும் ஒரு புலமைத்துறையாகவே இலக்கியத் திறனாய்வு உள்ளது. தமிழிலக்கியத் திறனாய்வின் ஒரு பகுதியாக ஈழத்துத் தமிழ்த் திறனாய்வு வரலாறு அமைகின்றது. ஈழத்துத் தமிழ் இலக்கியத் திறனாய்வு குறித்த முழுமையான ஆய்வு இல்லாது தமிழில் நவீன திறனாய்வு பற்றிய ஆய்வு முழுமை பெறாது.

1930 களிலிருந்து ஈழத்தில் நவீன இலக்கியத் திறனாய்வுக்கான அடிப்படைகள் இடப்படலாயின. படைப்பாளிகள் நிலையிலும், கோட்பாட்டு நிலையிலும், இலக்கிய இயக்கங்களின் அடிப்படையிலும், நிறுவன நிலையிலும் இதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. குறிப்பாக மாக்சியம், மொழியியல், அமைப்பியல், பெண்ணியம் முதலான மேலைத்தேயக் கலை இலக்கியக் கோட்பாடுகள் மற்றும் தத்துவப் பின்னணியில் வைத்து இலக்கியத்தை அணுகி மதிப்பிடும் கோட்பாட்டு நிலைப்பட்ட விமர்சன முறையியலை வளர்த்தெடுத்ததில் பேராசிரியர்கள் க. கைலாசபதி, கா. சிவத்தம்பி, சோ. கிருஷ்ணராசா, எம்.ஏ. நு.்மான், சிவசேகரம், நா. சுப்பிரமணியன், சித்திரலேகா மௌனகுரு மற்றும் ஏ.ஜே. கனகரட்ணா முதலியவர்களுக்கு முக்கிய பங்குண்டு. இதனை அண்மைக்கால ஆய்வுகள் தெளிவாக விளக்குகின்றன.

“நவீன தமிழிலக்கியத்தின் முதற் கோட்பாட்டாளர் என்று நான் கைலாசபதியைக் கருதுகின்றேன். இலக்கியத்தை மிக விரிவான சமூகப் பொருளியல் பின்னணியில் பொருத்திப்பார்த்து, இலக்கியப்போக்குகளின் இயல்புகளையும், உள்ளோட்டங்களையும் வகுத்துரைக்க முயன்றவர். இலக்கியப் படைப்புக்களை அவற்றின் கருத்தியல் சாராம்சம் சார்ந்து வகைப்படுத்தி, பொதுமைகளைக் கண்டறிந்து, அவற்றிலிருந்து இயங்குவிதிகளை உருவாக்க முயன்றார். நவீன தமிழிலக்கியத்தில் செயற்பட்ட முதல் அறிவியல்பூர்வமான அணுகுமுறை லைாசபதியினுடையது”.[1]

“தரவுகளை முறைப்படுத்தி அவற்றிலிருந்து பொதுமைகளைப் பெற்று, கருத்துக்களை உருவாக்குவதில் கைலாசபதியை விடவும் அறிவியல்பூர்வமான அணுகுமுறை சிவத்தம்பியிடம் காணப்படுகின்றது. இவ்வகையில் பார்த்தால் தமிழின் நவீன இலக்கியத்தில் செயற்பட்ட முதற்பெரும் கோட்பாட்டாளர் சிவத்தம்பியே”.[2]

இதுமாத்திரமன்றி, கோட்பாட்டுநிலைப்பட்ட திறனாய்வில் காணப்பட்ட குறைபாடுகளை, குடாக்களை நீக்கி, ஒற்றைப்படையான வாசிப்பு முறைகள் - மதிப்பீடுகளிலிருந்து விலகி, கலை இலக்கிய ஆக்கங்களை, அவற்றின் அழகியலை முன்னிறுத்திப் பாரக்கும் இலக்கிய வாசிப்புமுறையும் வளர்த்தெடுக்கப்பட்டது. இந்தவகையில் மு.தளையசிங்கம், எஸ். பொன்னுத்துரை, அ. யேசுராசா, மு. பொன்னம்பலம், கே. ரஞ்சகுமார், உமா வரதராஜன், உ. சேரன், பா. அகிலன் மற்றும் எஸ். சிவகுமாரன் முதலியவர்கள் முக்கியமானவர்கள். இந்த அணியின் முதனிலை ஆளுமையாளர்கள் குறித்து சுந்தரராமசாமி குறிப்பிடுவது முக்கியமானது.

"... பாரதியின் கருத்துலகை விடவும் தளையசிங்கத்தின் கருத்துலகம் முழுமையானது. மற்றொரு விதத்தில் சொன்னால் பாரதியின் சிந்தனையைத் தன் காலத்திற்குக் கொண்டு வந்து, இடைக்காலச் சரித்திரத்திற்கும் எதிர்வினை தந்து, இடைவெளிகளை அடைத்து, முழுமைப்படுத்த முயன்றார்".[3]

மேற்படி திறனாய்வுப் போக்குகளை ஒன்றிணைத்து, அவற்றை வரலாற்று வளர்ச்சியினடியாகச் சூழமைவுபடுத்திப் பார்க்கும் போதுதான் தமிழ்த் திறனாய்வு வரலாற்றின் முழுப்பரிமாணங்களையும் விளங்கிக்கொள்ள முடியும்.

இந்த விடயப் பொருள் - ஆய்வு தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட முயற்சிகளை உருத்திரட்டிப் பார்க்கும் போது அவற்றைப் பின்வருமாறு சாராம்சப்படுத்தலாம்.

- பெரும்பாலான திறனாய்வுப் பிரதிகள், திறனாய்வை ஒற்றைப்படையான ஒன்றாகக் கட்டமைக்க முயல்கின்றன.
- படைப்பினதும், படைப்பாளியினதும் கருத்துநிலைச்சார்பு குறித்துப் பார்க்க முற்படும் அதேவேளை, இலக்கிய வாசிப்புக்களுக்குப் பின்னால் தொழிற்பட்ட அரசியல் நிலைப்பாடு குறித்துக் கவனம் எடுக்கத் தவறியுள்ளன.

உதாரணம் :

| | | |
|---|---|---|
| கைலாசபதி.க., | (1980), | இலக்கியமும் திறனாய்வும் |
| ..............................., | (2002), | சமூகவியலும் இலக்கியமும் |
| சிவத்தம்பி.கா., | (2001), | விமர்சனச் சிந்தனைகள் |
| .........................., | (2001), | நவீனத்துவம் - தமிழ் - பின்நவீனத்துவம் |
| நு.்.மான்.எம்.ஏ., | (2006), | மொழியும் இலக்கியமும் |

தமிழில் நவீன இலக்கியத் திறனாய்வு பிரக்ஞைபூர்வமான வளர்ச்சி பெறுவதற்கு தனிமனித நிலையிலும், நிறுவனநிலைநின்றும் ஈழத்தறிஞர்கள் பெரும் பங்காற்றியுள்ளனர். ஆனால்,ஈழத்தில் தமிழிலக்கியத் திறனாய்வின் வளர்ச்சி வரலாறு, அதன் முக்கிய போக்குகள், அவற்றை உருவாக்கிய முக்கியமான ஆளுமைகள், தமிழிலக்கியத் திறனாய்வு வரலாற்றில் அவர்களின் வகிபங்கு என்பன குறித்து முழுமையான ஆய்வுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை. இதனால் இவையாவற்றையும் வரலாற்று முறையியலின் அடிப்படையில் சூழமைவுபடுத்தி முழுமையான - ஒரு பன்மைப்பாடான வாசிப்பை மேற்கொள்ளவே இந்த ஆய்வு முயற்சிக்கின்றது.

நவீன தமிழ் இலக்கியத் திறனாய்வு வளர்ச்சியில் ஈழத்து தமிழ்த் திறனாய்வாளர்களின் வகிபங்கினை மதிப்பிடுதல்.

- தமிழில் நவீன இலக்கியத் திறனாய்வு குறித்து சுருக்கமாக விளக்குதல்.
- ஈழத்தில் நவீன திறனாய்வு வளர்ச்சியினை வரலாற்று வளர்ச்சியனடியாக சூழமைவுபடுத்துதல்.
- ஈழத்துத் தமிழ் இலக்கியத் திறனாய்வின் முக்கிய போக்குக்களையும் முக்கிய விமர்சன ஆளுமைகளையும் இனங்காணுதல்.
- நவீன தமிழ் திறனாய்வு வரலாற்றில் ஈழத்துத் தமிழ்த் திறனாய்வாளர்களின் வகிபங்கினை மதிப்பிடுதல்.

*ஆய்வின் பயன்*

- ஈழத்துத் தமிழ்த் திறனாய்வு பற்றிய முழுமையான பார்வையினை வளர்த்தெடுக்க வாய்ப்பு ஏற்படும்; பெற்றுக்கொள்ள முடியும்.
- இலக்கிய திறனாய்வுச் செயற்பாட்டின் போது தொழிற்பட்ட கோட்பாடு மற்றும் கருத்துநிலைச் சார்புகளைப் புரிந்துகொள்ள முடியும்.
- இலக்கிய விமர்சனம் குறித்து நிலவிவரும் ஒற்றைப்படையான வாசிப்பிலிருந்து விலகி, அதனைப் பன்மைத் தன்மையுடையதாக வாசிக்க வாய்ப்பு ஏற்படும்.
- இலக்கிய விமர்சனம் என்பது விமர்சகனதும் ஆய்வாளனதும் கருத்தியல் இடையீட்டால் கட்டப்பட்ட ஒன்று என்பதைப் புரிந்துகொள்ள முடியும்.

**ஆய்வு முறையியல்**

தமிழிலக்கிய ஆய்வு - திறனாய்வு என்பது எப்போதும் கட்டமைக்கப்பட்ட ஒன்றாகவும், கருத்துநிலைச் சார்புடையதாகவும் இருந்து வருகின்றது. இதனால் இலக்கியப் பிரதிகளை

மீள்வாசிப்பிற்குட்படுத்தி, கட்டவிழ்த்து, அவற்றை வரலாற்று வளர்ச்சியினடியாகச் சூழமைவுப்படுத்திப் பார்க்கும் வரலாற்றுத் திறனாய்வு அணுகுமுறையின் அடிப்படையில் இவ் ஆய்வு முன்னெடுக்கப்படுகின்றது.

**சுருக்கமும் முடிவும்**

தமிழில் நவீன இலக்கியத் திறனாய்வு குறித்து சுருக்கமாக விளக்கி,ஈழத்தில் அதன் வளர்ச்சியை வரலாற்று அடிப்படையில் சூழமைவுபடுத்தி,ஈழத்துத்திறனாய்வின் முக்கிய போக்குகள், அவற்றின் பண்புகள், முக்கிய விமர்சன ஆளுமைகள் என்பவற்றை இனங்கண்டு, நவீன தமிழ் இலக்கியத் திறனாய்வு வரலாற்றில் அவற்றின் வகிபங்கினை மதிப்பிடுவதாக அமையும். இவ்வாய்வினூடாக பின்வரும் முடிவினை எட்டமுடிகிறது.

நவீன இலக்கியத் திறனாய்வு வரலாற்றின் ஒரு பகுதியாக ஈழத்துத் தமிழ்த் திறனாய்வு அமைகின்றது. கோட்பாட்டு ரீதியாகவும், பிரயோக ரீதியாகவும் முக்கிய போக்குகளை உருவாக்கியதில் ஈழத்தறிஞர்களுக்கு மிக முக்கியமான பங்குண்டு. ஈழத்துத் தமிழ் திறனாய்வு பற்றிய முழுமையான ஆய்வின் மூலமே தமிழ்த் திறனாய்வு பற்றிய ஆய்வு முழுமையடையும்.

**உசாத்துணை நூல்கள்**

ஜெயமோகன் (கட்டுரையாளர்), (2007 ஜுன்),**காலம் - பேராசிரியர் கா. சிவத்தம்பியின் சிறப்பிதழ்.**
சுந்தரராமசாமி, (2007),**ஆளுமைகள் மதிப்பீடுகள்,** சென்னை: காலச்சுவடுப் பதிப்பகம்
பஞ்சாங்கம். க., (2007),**தமிழிலக்கியத் திறனாய்வு வரலாறு,** சென்னை: அன்னம் வெளியீடு.
முத்துமோகன். சி., (2007),**மாக்சியக் கட்டுரைகள்,** சென்னை: காவ்யா வெளியீடு.